**பாடம் 4 - முளைப்பாரி**

**பாடம் : தமிழ்**

**வகுப்பு : 4**

## அ. கடினச்சொற்கள்

1.சிறுபயிறு

2.மணிப்பயிறு

3.முளைப்பாரி

4.குலவை

5.காப்புக்கட்டி

## புத்தகப் பயிற்சி வினாக்கள்

## அ. பொருள் தருக

1 .முளைப்பாரி - முளையிட்ட நவதானியங்கள் நிறைந்த சிறு மண்பாண்டம்

2. தையலர் - பெண்கள்

3. ஓலைக்கொட்டான் - ஓலையால் முடையப்பட்ட சிறு கூடை

4. மாட்டாந்தொழு - மாடு கட்டும் இடம்

5. ஆட்டாந்தொழு - ஆடு கட்டும் இடம்

## ஆ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. இரண்டெடுத்து இச்சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது ______

அ) இரண் + டெடுத்து **ஆ) இரண்டு + எடுத்து**

இ) இரண்டெ+ டுத்து ஈ) இரண்டெ+ எடுத்து

2. பொங்கலிட்டு இச்சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது ______

**அ) பொங்கல்+ இட்டு** ஆ) பொங்கல்+ லிட்டு

இ) பொங்க+ இட்டு ஈ) பொங்+ கலிட்டு

AAMSKOSAVAPATTY

3.மணி+பயறு என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

அ) மணிபயறு ஆ) மணபயறு

இ) மணப்பயறு **ஈ) மணிப்பயறு**

4. செவ்வாய் + கிழமை என்பதைச் சேர்த்து எழுதக்கிடைக்கும் சொல்____________

அ) செவ்வாய்கிழமை **ஆ) செவ்வாய்க்கிழமை**

இ) செவ்வாகிழமை ஈ) செவ்வாக்கிழமை

5. கீழ்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக.

அ) சோளத்தட்டு - **சோளம் + தட்டு**

ஆ) மாட்டெரு - **மாடு + எரு**

**இ. இப்பாடலில் ஒரேசொல் இரண்டு முறை அடுத்தடுத்து வருவதைக் கண்டறிந்து எழுதுக -அடுக்குத்தொடர்.**

எ.கா: கணுக்கணுவா

சுவைசுவையா

**ஈ. இப்பாடலில் இடம்பெற்றுள்ள ஒரேஓசையில் முடியும் சொற்களை எடுத்து எழுதுக.**

எ.கா: நாளையிலே - கிழமையிலே

கம்மந்தட்டை - சோளத்தட்டை

மாட்டாந்தொழு - ஆட்டாந்தொழு

**உ. இப்பாடலில் இடம்பெற்றுள்ள முதல் எழுத்து ஒன்றுபோல் வரும் சொற்களை எடுத்து எழுதுக.**

எ.கா: ஓலைக்கொட்டான் - ஓடும்பிள்ளை

வாங்கியாந்த - வாளியிலே

மாட்டாந்தொழு - மாட்டெருவு

AAMS KOSAVAPATTY

**ஊ. மேகத்திலுள்ள பேச்சு வழக்குச் சொற்களைக் குடையிலுள்ள எழுத்து வழக்குச் சொற்களுடன் இணைத்துக் காட்டுக.**




1. ஒசந்த - உயர்ந்த
2. செவ்வா - செவ்வாய்
3. வாங்கியாந்த - வாங்கிவந்த
4. ஊறவச்சி - ஊறவைத்து
5. முறிச்சி - முறித்து
6. மொளபோட்ட - முளைக்கவைத்த

**எ. பேச்சுவழக்குச் சொற்களுக்கு இணையான எழுத்து வழக்குச் சொற்களைஎழுதுக**

| பேச்சு வழக்கு | எழுத்துவழக்கு |
|---|---|
| படிச்சான் | படித்தான் |
| காத்தாலே | காலையில் |
| எந்திரி | எழுந்திரு |
| பதட்டம் | பதற்றம் |
| ஆப்பை | அகப்பை |
| சிலவு | செலவு |
| சுவற்றில் | சுவரில் |
| மனசில் | மனதில் |